


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூர் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அதிநவீன சைக்கிள் ஓட்டுதல் அரங்கில், நடைபெற்ற ‘2026– ம் ஆண்டுக்கான டிராக் ஆசிய கோப்பை சென்னை’ போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூர் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அதிநவீன சைக்கிள் ஓட்டுதல் அரங்கில், நடைபெற்று வரும் 2026ம் ஆண்டுக்கான டிராக் ஆசிய கோப்பை சென்னை’ போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, திருமதி வரலட்சுமி மதுசூதனன், எஸ்.அரவிந்த் ரமேஷ், எஸ்.எஸ்.பாலாஜி, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி கமலக்கண்ணன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 30, 31 தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுற்றுப்பயணம்!

# சட்டக் கல்லூரி - வேளாண்மை கல்லூரிக் கட்டிடங்களை திறந்து வைக்கிறார்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் சிறப்பான வரவேற்பு!

சிவகங்கை, ஜன.30-

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (30) மற்றும் நாளை (31) ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். பல்வேறு திட்டப்பணி களை மக்களுக்கு அர்ப்பணிக்கிறார். ஐந்து ஆண்டுகளில் கழக தலைவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல்தமிழகம் முழுவதும் பல்வேறு அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து முழு அளவில் திட்டங்கள் நிறைவேற்றப்படு கிறது.

முதல்வரின் சீரிய அறிவிப்பினால் சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு அரசு பணிகள் நடைபெற்று வருகின்றது. இதில் சிவகங்கை மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் காரைக்குடியில் சட்டக் கல்லூரியும் செட்டிநாடு கானாடுகாத்தானில் வேளாண்மை கல்லூரியும் கடந்த ஆண்டு துவக்கப் பட்டது. தற்பொழுது அந்த கல்லூரிக்கான புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. டைட்டல் பார்க் மற்றும் புதிய கட்டிடங்களை திறந்து வைத்தும் காரைக்குடியில் ரூபாய் 50 கோடியில் அமைக்கப்பட்டுள்ள வீறு கவியரசர் முடியரசனார் சிலை திறப்பு விழா,

ரூபாய் 22கோடியில் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் கீழடியில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளி அருங்காட்சியகத்தை மக்களுக்கு அர்ப்பணிக்கிறார். இதற்காக இன்று (30ம்தேதி) முதல்வர் ஸ்டாலின் அவர்கள் சிவ கங்கை மாவட்டத்தில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அவரது சுற்றுப்பயணயம் விவரம் வருமாறு. நாளை 30ம்தேதி சென்னையில் இருந்து விமானம் மூலம் பிற்பகல் மதுரை வருகிறார். மதுரையிலிருந்து கார் மார்க்கமாக முதல்வர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு செல்கிறார். முதல் நிகழ்ச்சியாக திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி சிறாவயலில் அண்ணல் காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்த பொழுது கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ஜீவா அவர்கள் சிறாவயலில் சந்தித்துப் பேசினார். அத்தகைய சிறப்புமிக்க வரலாற்று சம்பவத்தை நினைவூட்டும் வகையில் ரூபாய் 3 கோடியில் மணிமண்டபம் கட்டப் படும் என்று முதல்வர் அறிவித்தார்கள்.

அண்ணல் காந்தியடிகள் தோழர் ஜீவா சந்தித்த சிறாவயலில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மணி மண்டப த்தினை முதல்வர் திறந்து வைக்கிறார் . அதனைத் தொடர்ந்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா அரசு சார்பில் நடைபெறும் என்று அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக குன்றக்குடியில் உள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். பின்னர் காரைக்குடியில் ரூபாய் 50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வீறு கவியரசர் முடியரசனார் சிலையை திறந்து வைக்கிறார் .

இரவு காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் தங்குகிறார். மறுநாள் 31 ஆம் தேதி சனிக்கிழமை காலை காரைக்குடியில் ரூபாய் 100 கோடியே 45 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சட்டக் கல்லூரி கட்டிடத்தினை திறந்து வைக்கிறார்.

அதை தொடர்ந்து செட்டிநாட்டில் ரூபாய் 61 கோடியே 78 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வேளாண்மை கல்லூரி கட்டிடங்களை திறந்து வைத்து விழா பேருரை ஆற்றுகிறார் .புதிய திட்டங்கள் அறிவிப்பினை வெளியிடுகிறார். அதை தொடர்ந்து டைட்டில் பார்க்கினை திறந்து வைத்தும் மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார் . அதை தொடர்ந்து பிற்பகல் 12 மணியளவில் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தாலுகா கீழடியில் ரூபாய் 22 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள திறந்த வெளி அருங்காட்சியகத்தினை மக்களுக்கு அர்ப்பணிக்கிறார். அதன் பிறகு மதுரை சென்று அங்கிருந்து விமானம் மூலம் சென்னை செல்கிறார் .

இன்று (30ம்தேதி-வெள்ளிக் கிழமை) மாலை 4.00மணி அளவில் பொற்கால ஆட்சி நாயகர் முதல்வருக்கு திருப்பத்தூர் பேரறிஞர் அண்ணா சிலை முன்பாக மாவட்ட கழகத்தின் சார்பில் செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் சிறப்பான வரவேற்பு தரப்படுகிறது. முதல்வர் இரண்டு நாள் வருகையை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட எல்கையான எஸ்.

எஸ். கோட்டையில் இருந்து காரைக்குடி வரை சுமார் 100கி.மீதூரம் ரோட்டின் இருபுறமும் இரு வண்ணக் கொடிகளாலும் வண்ண மின்விளக்கு ளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

ஆங்காங்கே முதல்வரை வரவேற்பதற்காக சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முதல்வர் வருகையை முன்னிட்டு அப்பகுதி விழாக்கோலம் ஏற்பட்டுள்ளது. நாளை 30 ம் தேதி திருப்பத்தூரில் நடைபெறும் முதல்வர் வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சார்புஅணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொது மக்கள் கலந்து கொள்கிறார்கள் . முதல்வர் அவர்கள் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் வரவேற்பு ஏற்பாடுகளை மாவட்ட கழக செயலாளர் கூட்டு றவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் ஒன்றிய ,நகர, பேரூர், கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

### தஞ்சை அதிராமப்பட்டினம் – சமூக ஆர்வலர்

# இமாம் ஷாஃபி மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளர் எம்.எஸ்.தாஜுதீன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.30-

தஞ்சை மாவட்டம் அதிராமபட்டினத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரும், இமாம் ஷாஃபி மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளருமான எம்.எஸ்.தாஜுதீன் அவர்கள் நேற்று மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் அவர்கள் விடுத்தள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தஞ்சை மாவட்டம், அதிராமபட்டினத்தைச் சேர்ந்த சமூகநல ஆர்வலரும், இமாம் ஷாஃபி மெட்ரிகுலேஷன் பள்ளியின் தாளாளருமான எம்.எஸ். தாஜுதீன் அவர்கள் இன்று மறைவுற்ற செய்தி அறிந்து மிகவும் மனம் வருந்தினேன்.

இமாம் ஷாஃபி மெட்ரிகுலேஷன் பள்ளியை நிறுவி பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குத் துணை நின்றவர். அதிராமபட்டினத்தில் மருத்துவ வசதி குறைவாக இருந்த காலத்தில் ஷிபா மருத்துவனையைத் தொடங்கி, ஏழை, எளிய மக்களுக்குச் சிறந்த சிகிச்சை வசதி கிடைக்கச் செய்த பெருமைக்குரியவர். அத்துடன், அதிராமபட்டினத்தின் வளர்ச்சிக்குப் பல வகையிலும் பாடுபட்டு வந்த பண்பாளர்.

எம்.எஸ்.தாஜுதீன் மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அதிராமபட்டினம் பொதுமக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.எஸ்.தாஜுதீன் அவர்கள், அவர் புரிந்த நற்பணிகளின் வழியாக என்றென்றும் நினைவு கூரப்படுவார்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 8** ம.அ.8.ந.க.எண்.இ1/9915/2025

**குறுகியகால மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

இணை இயக்குநர் / உதவி ஆணையர்(சி.நி) / மண்டல அலுவலர் - 8 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப் புள்ளி கோரப்படுகிறது.

**மாநிலங்களவை உறுப்பினர் (ராஜ்ய சபா) தொகுதி மேம்பாட்டு நிதி மண்டலம் - 8, பகுதி 21, வார்டு - 94 சிட்கோ நகர் 4வது பிரதான சாலையில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் கூடுதல் கட்டுமான பணி.**

மொத்த பணியின் உத்தேச தொகை **ரூ.62.51 லட்சம் முன்வைப்பு தொகை 1% ரூ.62,600/-**
மேலும் விவரங்களுக்கு **https://www.tntenders.gov.in** மற்றும் **https://www.chennaicorporation.gov.in** என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் **05.02.2026 அன்று மாலை 3.00** மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் **06.02.2026 அன்று மாலை 3.30** மணி.

செ.ம.தொ.இ / 594 / ஒப்பந்தப்புள்ளி / 2026 **இணை இயக்குநர் / முதுநிலை உதவி ஆணையர்(சி.நி) / மண்டல அலுவலர் - 8**




திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் வெங்கத்தூர் ஊராட்சியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் ஐடிஐயில் மடிகணினிகள் மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், மாணவ மாணவிகளுக்கு அரசு வழங்கும் மடிகணினிகள் மற்றும் மிதிவண்டிகளை வழங்கினார் உடன் மாவட்ட அவைத் தலைவர் க.திராவிட பக்தன்,அரசினர் கல்லூரி சிவசுப்பிரமணியம், ஒன்றிய செயலாளர் அரிகிருஷ்ணன், பி.கே.நாகராஜ்,கே.ஏ. மதியழகன், கே. ஏ. சத்யா,நந்தகுமார், கொப்பூர் திலீப் குமார், மோகனசுந்தரம், மற்றும் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

### ஆட்சிக்கு வந்த

# 1728 நாட்களில் 4000 திருக்கோயில் குடமுழுக்குகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன. 30 -

திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்த 1728 நாட்களில் 4000 திருக்கோயில்களில் குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஆட்சிக்கு வந்த 1728 நாட்களில் 4000 திருக்கோயில் குடமுழுக்குகள்!

ஆயிரமாவது குடமுழுக்கு மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாதர் திருக்கோயில் (2023)

2 ஆயிரமாவது குடமுழுக்கு மயிலாடுதுறை கீழப்பரசலூர் வீரட்டேஸ்வரர் திருக்கோயில் (2024)

3 ஆயிரமாவது குடமுழுக்கு நாகை திருப்புகலூர் அக்னீஸ்வரர் திருக்கோயில் (2025)

4 ஆயிரமாவது குடமுழுக்கு இன்று, பெரம்பூர் சேமாத்தம்மன் திருக்கோயிலில்...

இதுவரை இப்படி ஒரு சாதனை தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லை! மதவாத அரசியல் செய்வோர்க்குத் தமிழ்நாட்டில் இடமில்லை!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### உத்தமர் காந்தியடிகள் – தோழர் ப.ஜீவா இருவரும் சந்தித்ததன் நினைவாக

# சிராவயல் கிராமத்தில் சிலைகளுடன் கூடிய நினைவரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

சிவகங்கை, ஜன.30-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.1.2026 வெள்ளி, 31.1.2026 சனி ஆகிய இரண்டு நாள்கள் சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்கிறார். உத்தமர் காந்தியடிகள் ப.ஜீவா இருவரும் சந்தித்ததன் நினைவாக சிராவயல்கிராமத்தில் கட்டப்பட்டுள்ள சிலைகளுடன் கூடிய நினைவரங்கத்தை திறந்து வைக்கிறார். இதில்தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழாவில் பங்கேற்கிறார்.

கழனிவாசலில் வீறுகவி அரசர் முடியரசனார் சிலை ரூ. 100 கோடியில் சட்டக் கல்லூரி,

ரூ.32 கோடியில் மினி டைடல் பூங்கா , கானாடு காத்தானில் ரூ.61.78 கோடியில் செட்டிநாடு வேளாண் கல்லூரி, ரூ.2560 கோடி மதிப்பிலான 49 பணிகளைத் திறந்து வைத்து ரூ. 13.36கோடி மதிப்பிலான 28 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி ரூ. 205 கோடி மதிப்பில் 15453 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கை மாவட்டத்தில் 30.1.2026 வெள்ளி 31.1.2026 சனி இரண்டு நாள்களிலும் கள ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறார்.

30.1.2026 வெள்ளிக்கிழமை அன்று திருப்பத்தூர் வட்டம் சிராவயல் கிராமத்தில், சுதந்திரப் போராட்ட காலத்தில் உத்தமர் காந்தியடிகள் தோழர் ப.ஜீவா அவர்களைச் சந்தித்துப் பேசியதன் நினைவாக செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ரூ.3.27 கோடி மதிப்பீட்டில், அங்கு அவர்களின் சிலைகளுடன் கட்டப்பட்டுள்ள நினைவு அரங்கத்தினைத் திறந்து வைக்கிறார்கள். அதனை தொடர்ந்து குன்றக்குடி ஊராட்சியில், நினைவில் வாழும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெறும் அரசு விழாவில்பங்கேற்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்.

பின்னர், காரைக்குடி வட்டம், கழனிவாசல் பகுதியில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள வீறுகவியரசர் முடியரசனார் அவர்களின் திருவுருவச்சிலையினைத் திறந்து வைத்துச் சிறப்பிக்கிறார்.

மறுநாள் 31.1.2026 சனிக்கிழமை அன்று கானாடுகாத்தான் பேரூராட்சியில் ரூ.61.78 கோடி மதிப்பீட்டில் அமைந்துள்ள செட்டிநாடு வேளாண் கல்லூரி, காரைக்குடி வட்டம், கழனி வாசல் பகுதியில் ரூ.100.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சட்டக்கல்லூரி ஆகியவற்றைத் திறந்து வைக்கிறார். தொடர்ந்து சட்டக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும் விழாவில் ரூ,13.36 கோடி மதிப்பீட்டிலான 28 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ,2,559.50 கோடி மதிப்பீட்டிலான 49 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைக்கிறார். 15,453 பயனாளிகளுக்கு ரூ.205.06 கோடி மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளையும் வழங்குகிறார்.

அதனைத்தொடர்ந்து, காரைக்குடி வட்டம், கழனிவாசல் பகுதியில் ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவினைத் திறந்து வைத்துப், பார்வையிட்டுச் சிறப்பிக்கிறார்.

இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும், பொதுமக்கள் அதிக அளவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### “உலகம் உங்கள் கையில்“ எனும் மாபெரும் திட்டத்தின்கீழ்,

# சென்னையில் 1,627 பேருக்கு விலையில்லா மடிக்கணினிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி பேருரையாற்றினார்!



சென்னை.ஜன.30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (29.01.2026) சென்னை, அடையாறு மண்டலம், திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளியில்,“உலகம் உங்கள் கையில்“ எனும் மாபெரும் திட்டத்தின்கீழ், 4 கல்லூரி மாணவ மாணவிகள் 1,627 பேருக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி விழா பேருரையாற்றினார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**“உலகம் உங்கள் கையில்“ திட்டம்**

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை கடந்த 05.01.2026 அன்று சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு முழுவதிலும் அரசு கல்லூரிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் என்று 10 இலட்சம் மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவதற்கு ஏற்ப, ரூ.2,172 கோடி மதிப்பீட்டிலான திட்டத்தை தொடங்கி வைத்தார். அந்தவகையில் தமிழ்நாடு முழுவதிலும் அனைத்து கல்லூரிகளிலும் இது போன்ற நிகழ்ச்சிகளின் வாயிலாக மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. இன்று வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவான்மியூர் சென்னை மேல்நிலைப்பள்ளியில் இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவியர் 918 பேருக்கும், வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அடையாறு பகுதியில் உள்ள பேட்ரிசியன் கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியர் 655 பேருக்கும், எம் ஏ சிதம்பரம் School of Nursing ஆகிய கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் என ஆக மொத்தம் 1627 பேருக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் நேரிடையாகச் சென்று கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கி வருகிறோம். இதில் மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் எம்.ஜி.ஆர்ஜானகி கலை அறிவியல் கல்லூரி, பேட்சிரியர் கலை அறிவியல் கல்லூரியைச் சார்ந்த மாணவிகள் ஏறத்தாழ 10க்கும் மேற்பட்டவர்கள் செவித்திறன் குறைபாடு உள்ளவர்கள். பார்வை குறைபாடு உள்ள 10க்கும் மேற்பட்டமாணவர்கள் மேடையில் மடிக்கணினிகளை பெறுகின்றபோது மிகுந்த மகிழ்ச்சியை தெரிவித்து விட்டு சென்றார்கள். இப்படி இந்த திட்டம் என்பது இளைய சமுதாயத்தினரை மகிழ்விக்கும் திட்டமாக இருந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் வெறும் மடிக்கணினி என்று மட்டுமல்லாது பெர்ப்ளெக்ஸிட்டி AI ப்ரோ என்கின்ற வகையில் ஒரு Advance Technology இணைத்திருக்கிறார்கள். பொதுவாக மாணவ, மாணவியர்கள் இந்த மடிக்கணினியினை பயன்படுத்தும்போது சந்தாவை வெளியில் இருந்து வாடகைக்கு பெற வேண்டும் என்று சொன்னால் மாதத்திற்கு ரூ.1,950/வரை செலவாகும். முதலமைச்சர் இந்த மடிக்கணினியோடு சேர்த்து Surfexicity AI Pro Tool இலவசமாக வழங்கி இருக்கிறார்கள். இது மிகப் பெரிய அளவில் மாணவர்களிடையே வரவேற்பை பெற்றிருக்கிறது.

புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம்

இந்த அரசுப் பொறுப் பேற்றதற்கு பிறகு, புதுமைப்பெண் எனும் திட்டத்தின் மூலம் 6,92,471 மாணவிகளுக்கும், தமிழ்ப் புதல்வன் எனும் திட்டத்தின் மூலம் 5,40,429 மாணவர்களும் மாதந்தோறும் ரூ.1,000/ பெறுகின்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் நான் முதல்வன் எனும் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி வழங்குவது, அவர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத் தருவது, படித்து முடித்தவர்களுக்கு வழிகாட்டி செய்வது, மேற்படிப்புகளுக்கான உண்டான வசதிகள் ஏற்படுத்தி தருவது போன்ற பணிகளை செய்துக் கொண்டிருக்கும் காரணத்தினால் அதன்மூலம் 42 இலட்சம் பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். மேலும் முதலமைச்சர் 7.5% இடஒதுக்கீடு மூலம் மருத்துவம், பொறியியல், பல் மருத்துவம், வேளாண்மை, கால் நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் மற்றும் பிற தொழில்நுட்பவியல் என மேற்படிப்பிற்கு 7.5% இடஒதுக்கீடு தந்திருக்கிறார்கள். இப்படி பல சலுகைகளை வழங்கி வரும் காரணத்தினால்தான் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேர்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. ஒன்றிய அளவிலான உயர்கல்வி சேர்க்கைக்கான சதவிகிதம் 28.4 ஆனால் தமிழ்நாடு 47% என்று மாணவ, மாணவியர்கள் உயர்கல்வியில் சேர்ந்திருக்கிறார்கள். இது நாங்கள் சொல்கின்ற புள்ளி விவரம் அல்ல, அண்மையில் ஒன்றிய அரசு India Economics 202425 என்கின்ற அமைப்பு தெரிவித்திருக்கின்ற ஒரு செய்தி. எனவே தமிழ்நாடு அரசு 47% உயர்கல்வி சேர்க்கையில் இந்தியாவில் இருக்கின்ற 36 மாநிலங்களில் முதன்மை மாநிலமாக இருந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கடி சொல்வது போல கல்வியும், மருத்துவமும் எனது இரு கண்கள் என்று சொல்வார்கள். அந்தவகையில் இந்த கல்வியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இந்த அரசு செயல்படுத்துகின்ற திட்டங்கள் மக்களிடையே பெரிய வரவேற்பு பெற்று வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்திளார்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை த.வேலு, அசன் மௌலானா, பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.